செ.வெ.எண்: 04/அக்டோபர் நாள்: 02.10.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**விவசாயிகள் பயன்பெறும் வகையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொ) திரு.ஆ.ம.காமாட்சி கணேசன் அவர்கள் தகவல்**

தமிழகத்தில் நெல்பயிரிடும் விவசாயிகள் பயனடையும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் அந்தந்த மாவட்டங்களில் அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் பணிகள் நடைபெற்று வருகிறது.

விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் எளிதில் பதிவு செய்து கொண்டு நெல் விற்பனை செய்ய ஏதுவாக, ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள e-DPC இணையத்தில் எதிர்வரும் கொள்முதல் பருவம் 2021-2022-ல் விவசாயிகள் தங்களது பெயர், ஆதார் எண். புல எண், வங்கிக்கணக்கு எண் உள்ளிட்ட விவரங்களை எளிய முறையில் **www.tncsc.tn.gov.in** மற்றும் www.tncsc-edpc.in ஆகிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொள்முதல் செய்ய வேண்டிய தேதியினை முன்பதிவு செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டவுடன் விவசாயிகள் நிலம் இருக்கும் கிராமங்களின் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இணைய வழியின் மூலமாகவே கிராம நிர்வாக அலுவலரின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் பெயர், நெல் விற்பனை செய்யப்படும் நாள் மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் விவசாயிகளின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும். விவசாயிகள் தங்களது அலைபேசி எண்ணில் பெறப்பட்ட குறுஞ்செய்தியின் அடிப்படையில் நீண்ட நேரம் காத்திருக்காமல் குறித்த காலத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தாங்கள் விளைவித்த நெல்லை விற்பனை செய்து கொள்ளலாம்.

நடப்பு 2021-22ம் ஆண்டுக்கு நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதார விலை, மத்திய அரசின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலையை விட "A" கிரேடு இரகங்களுக்கு கிலோவிற்கு ரூ.1.00/ம் மற்றும் பொது இரகங்களுக்கு கிலோவிற்கு 75 பைசாவும் கூடுதலாக நிர்ணயம் செய்து தமிழக அரசு ஆணை G.O.(4D).No.6, நாள்: :1.10.2021 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை பிறப்பித்துள்ளது. அதன்படி கொள்முதல் விலை

1. "A" கிரேடு நெல் ரகங்களுக்கு - ரூ.20.60/ கிலோ
2. பொது ரகங்களுக்கு - ரூ.20.15/ கிலோ

விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல்லினை நமது மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்படும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து லாபம் பெற்று பயனடையலாம்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், இராமநாதபுரம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர்(பொ) திரு. ஆ.ம.காமாட்சி கணேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்புஅலுவலகம், இராமநாதபுரம்.**